RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2412

OPEN ACCESS

# ஒப்பியல் நோக்கில் ஐரோப்பிய தத்துவங்களும் பாரதியார், பாரதிதாசன் கவிதைகளும்

**ஆ. மரிய சாந்தி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி), தூத்துக்குடி-628001, தமிழ்நாடு, இந்தியா

# European Philosophies and the Poems of Bharathiar and Bharathidasan from a Comparative Point of View

**A. Maria Shanthi** [a, *]

[a] Department of Tamil, St. Mary's College (Autonomous), Thoothukudi-628001, Tamil Nadu, India

* Corresponding Author:
mariashanthiosm@gmail.com

Received: 19-08-2022
Revised: 29-10-2022
Accepted: 23-11-2022
Published: 15-12-2022

Check for updates

**ABSTRACT**

God creates and protects this world. Nature can be called God. Comparing European philosophies such as the philosophy that God can be called nature, the philosophy of nature, which is the cause of everything, the relational theory of kinetic energy in nature, the aesthetic theory that the world is available to us only in the form created, the utilitarian theory, the theory of utilitarianism, and the philosophy that imagination meets the visuals of the realm of phenomena and the conceptions of the realm of knowledge, Bharathiar and Bharathidasan's poems show that experience occupies a more fundamental place than knowledge. In philosophy, everything in nature is in motion. The philosophy that matter has within itself the driving force, the philosophy that belief occupies more place in human behaviour than knowledge, the philosophy of positivism, the philosophy of avoiding suffering and living happily, the philosophy of thinking therefore, the philosophy of being the human essence, the philosophy of labour, and the philosophy of reality are rational. Comparing European philosophies such as the philosophy of knowledge as real, the essential need for peace for man, and liberation with the poems of Bharathiar and Bharathidasan.

**Keywords:** Bharathiar, Bharathidasan, Poems, Philosophy

## முன்னுரை

இறைவன், இயற்கை, இன்பம், அறிவு, அமைதி, அழகு, அனுபவம், கற்பனை, சிந்தனை, நேர்க்காட்சி, நம்பிக்கை, உழைப்பு, விடுதலை இவற்றை மையக்கருத்தாகக் கொண்டு பாரதியார் பாரதிதாசன் கவிதைகள் புனைந்துள்ளனர். ஐரோப்பிய தத்துவங்களையும் பாரதியார், பாரதிதாசன் கவிதைகளையும் ஒப்பிட்டு நோக்கி உண்மைகளை எடுத்துரைத்தல் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இறைவன் உலகைப் படைத்தார் என்னும் தத்துவம்

தித்ரோ அற்புதமான பிரெஞ்சுப் பொருள் முதல்வாதி. ரூஸ்ஸோவின் நெருங்கிய நண்பர். இறைவன் உலகைப் படைத்தார். "படைக்கப்பட்ட உலகம் அதன்பின் சுதந்திரமாகத் தனது சொந்த இயக்க விதிகளால் செயல்படுகிறது. கடவுள் அதனுள் தலையிடுவது கிடையாது" என்று தித்ரோ தான் எழுதிய 'தத்துவச் சிந்தனைகள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார் (Muthu Mohan, 2000).

இறைவன் இவ்வுலகைப் படைத்துப் பாதுகாக்கிறார் என்பது ஐரோப்பிய தத்துவங்களில் ஒன்று. இத்தத்துவத்தை இந்தியர்களில் பெரும்பான்மையினர் முழுமையாக நம்புகின்றனர்.

'இறைவா! இறைவா!' என்ற கவிதையில் பாரதியார் இறைவன் உலகைப் படைத்தார் என்பதை எடுத்துரைத்துள்ளார். எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா! என்று வியக்கின்ற பாரதி, "ஐம்பூதத்து வியனுலகு அமைத்தாய். அத்தனை உலகமும் வர்ணக் களஞ்சியமாகப் பலபல நல்லழகுகள் சமைத்தாய்" (பாரதியார், 2014) என்கிறார். பரம்பொருளாகிய இறைவன் தான் படைத்ததைப் பராமரித்துக் காத்து வருகிறார் என்பதைப் பாரதி உறுதியாக நம்புகிறார்.

"தெய்வங்களே!

என்றும் விளங்குவீர், என்றும் இன்பம் எய்துவீர்

என்றும் வாழ்வீர் என்றும் அருள் புரிவீர்

எவற்றையும் காப்பீர்" (Bharathiar, 2014)

தெய்வங்களை வாழ்த்துகிறார் பாரதி. தெய்வங்கள் இன்பம் எய்துக. அவை வாழ்க. அவை வெல்க. காத்தல் இனிது. காக்கப்படுதலும் இனிது. அழித்தல் நன்று. அழிக்கப்படுதலும் நன்று என்கிறார். இறைவன் வெற்றி கொள்ள வேண்டும் என்பது பாரதியின் வேட்கையாகும். படைத்தல், காத்தல், அழித்தல் என்பது பரம்பொருளாகிய இறைவன் புரியும் முத்தொழில்கள் என்பதை இந்திய மக்கள் முழுமையாக நம்பினர்.

## இயற்கையில் இறைவனின் வெளிப்பாடு

இயற்கையைப் படைத்த இறைவன் இயற்கையில் தன்னை வெளிப்படுத்துகின்றார். படைப்பின் சிகரமாகிய மனிதர்களும் இதனை உணர்கின்றனர். ஆன்மீகத்தில் சிறந்த நாடு இந்தியா. பாரதியார் 'நந்தலாலா' என்ற கவிதையில் தான் பார்ப்பதில் கேட்பதில் இறைமை புலப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

"காக்கைச் சிறகினிலே நந்த லாலா! - நின்றன்

கரியநிறந் தோன்று தையே நந்த லாலா!

பார்க்கும் மரங்க ளெல்லாம் நந்த லாலா! - நின்றன்

பச்சைநிறந் தோன்று தையே நந்த லாலா!

கேட்கும் மொழியி லெல்லாம் நந்த லாலா - நின்றன்

கீதம் இசைக்குதடா நந்த லாலா!

தீக்குள் விரலை வைத்தால் நந்த லாலா - நின்னைத்

தீண்டும் இன்பந் தோன்றுதடா நந்தலாலா!" (Bharathiar, 2014)

காக்கைச் சிறகினிலும் பச்சை மரங்களிலும் இறைவனது நிறம் தனக்குத் தோன்றுவதாகவும் தான் கேட்கும் மொழிகளில் எல்லாம் இறைவனது கீதம் இசைப்பதாகவும் தீக்குள் விரலை வைத்தால் கூட இறைவனைத் தீண்டும் இன்பம் தனக்குத் தோன்றுவதாகவும் பாரதியார் குறிப்பிட்டுள்ளார். பாரதியாரின் இத்தகைய இறையனுபவம் அவரது ஆழமான ஆன்மீகத்தை வெளிப்படுத்துகிநது.

"இயற்கையை இறைவன் எனலாம். இறைவனை இயற்கை எனலாம்" என்று பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஸ்பினோசா கூறியுள்ளார். இக்கூற்று பாரதியாரின் கூற்றோடு பொருந்தி வருகிறது (Muthu Mohan, 2000).

## இயற்கைக் கோட்பாடு

பிரெஞ்சுப் பொருள் முதல்வாதிகளின் தொடக்கமாக அமைந்தது இயற்கை. பொருள் - இயற்கை. இயற்கையே முதல்பொருள், மூலப்பொருள் என்று மீண்டும் மீண்டும் அவர்கள் வலியுறுத்தி கூறியுள்ளனர். எல்லாவற்றுக்கும் காரணமாக அமைவது இயற்கை. அது தன்னில் தானே வாழுகிறது. இயற்கை நிரந்தரமானது. எல்லாக் காலத்திலும் அது வாழும் என்கிறார் ஹோல்பாக் (Muthu Mohan, 2000).

"இயற்கை யாராலோ செய்யப்பட்ட பொருளல்ல. அது எப்போதும் உள்ளது. அதன் வயிற்றில்தான் எல்லாமே பிறப்பெடுக்கின்றன. இயற்கை மாபெரும் படைப்புச் செயல் நிகழும் பட்டறை. தனக்குத் தேவையான கருவிகளையும் அது தானே உற்பத்தி செய்து கொள்கிறது. எல்லாச் செயல்களுமே இயற்கையால் செய்யப்படுவன. இயற்கையால் இயலாத காரியம் வேறு எதனாலும் இயலாத காரியமே" என்று ஐரோப்பியத் தத்துவங்கள் என்னும் நூல் கூறுகிறது (Muthu Mohan, 2000).

இயற்கை இனிமையானது என்று பாரதியார் 'காட்சி' என்ற வசன கவிதையில் குறிப்பிட்டுள்ளார். இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான் இனிமையுடைத்து. காற்றும் இனிது. தீ இனிது. நீர் இனிது. ஞாயிறு நன்று. திங்களும் நன்று. வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன. மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது. கடல் இனிது. மலை இனிது. காடு இனிது. ஆறுகள் இனியன. உலோகமும் மரமும் செடியும் கொடியும் மலரும் காயும் கனியும் இனியன. பறவைகள் இனிய. ஊர்வனவும் நல்லன. விலங்குகள் எல்லாம் இனியவை. நீர் வாழ்வனவும் நல்லன. மனிதர் மிகவும் இனியர் என்கிறார்.

"இவை ஒருபொருளின் பலதோற்றம்.

உள்ள தெல்லாம் ஒரே பொருள்" (Bharathiar, 2014)

இறைவன் இயற்கையைப் படைத்து அதனை நல்லதெனக் கண்டார் என்கிறது விவிலியம். பரம்பொருளின் பல்வேறு தோற்றமாக இயற்கையைக் கண்ட பாரதி, இயற்கை அனைத்தும் ஒருபொருளே எனக் குறிப்பிடுகிறார்.

"எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்

என்றுரைத்தான் கண்ண பெருமான்" (Bharathiar, 2014)

எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்றார் என்று பாரதி குறிப்பிட்டுள்ளார்.

## இயற்கையில் இயக்க சக்தி

"இயற்கையில் எல்லாமே இயக்கத்தில் உள்ளன. பொருள் தனக்குள்ளேயே தனக்கு இயக்கு சக்தியைக் கொண்டுள்ளது. பொருளின் சாராம்சமே இயக்கம்தான்" என்கிறார் ஹோல்பாக். "இயக்கம் இல்லாத எந்த ஒரு பகுதியும் இயற்கையில் இல்லை. ஒரு பருப்பொருளுக்கும் இன்னொன்றுக்கும் இடையிலான உறவே இயக்கம்" என்று ஹோல்பாக் வரையறுக்கின்றார் (Muthu Mohan, 2000)..

பாரதியார் ஞாயிறு பலவற்றோடு தொடர்புடையது. ஞாயிறின் முகத்தைப் பார்க்கும் பொருளெல்லாம் ஒளி பெறுகின்றன. ஒளியைப் பெற்றதும் நகை செய்கின்றன. ஞாயிறு பலவற்றோடு உறவும் தொடர்பும் கொண்டுள்ளது என்பதைப் பாரதி சுட்டிக்காட்டுகிறார்.

"ஞாயிறே, நின்னைப் பரவுகின்றோம்

மழையும் நின்மகள் மண்ணும் நின் மகள்

காற்றும் கடலும் கனலும் நின் மக்கள்

வெளி நின் காதலி

இடியும் மின்னலும் நினது வேடிக்கை" (Bharathiar, 2014)

என்கிறார். ஞாயிறுக்கும் இருளுக்கும் ஒளிக்கும் தொடர்புண்டு, உறவுண்டு. ஞாயிறே! இருளை என்ன செய்து விட்டாய்? என்று வினவிய பாரதி, கட்டி முத்தமிட்டு நின் கதிர்களாகிய கைகளால் மறைத்து விட்டாயா? அது நின் காதலியா? இரவெல்லாம் நின்னைக் காணாத மயக்கத்தால் இருண்டிருந்ததா? நின்னைக் கண்டவுடன் நின்னொளி தானும் கொண்டு நின்னைக் கலந்து விட்டதா? நீங்கள் இருவரும் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகளா? முன்னும் பின்னுமாக வந்து உலகத்தைக் காக்கும்படி உங்கள் தாய் ஏவியிருக்கிறாளா? என்று வினவுகிறார் (Bharathiar, 2014). "சொல்புதிது பொருள்புதிது ஜோதிமிக்க நவகவிதை" என்பதுபோல் பாரதியார் இருள் பற்றிய புதிய பொருளைத் தருகிறார்.

ஒளியே நீ யார்? என்று வினவிய பாரதி, ஞாயிற்றின் மகளா? நீ அறிவின் மகள் போலும். தெளிவு நீ போலும் என்று ஞாயிறுக்கும் ஒளிக்கும் இடையே உள்ள உறவு நிலையைக் கூறுகிறார். காற்றுக்கும் சுடருக்கும் இடையே உள்ள உறவைக் கூறுகிறார். இதனை,

"விளக்குத்திரி காற்றாகிச் சுடர் தருகின்றது.

காற்றுக்கும் சுடருக்கும் எவ்வகை உறவு?

காற்றின் வடிவே திரியென் றறிவோம்"

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன (Bharathiar, 2014).

## அழகியல் தத்துவம்

ஜெர்மானிய நாட்டு தத்துவ அறிஞர் கான்ட் என்பவரின் தத்துவங்களில் ஒன்று புலன்சாரா நிகழ்வியல் அல்லது அழகியல் என்பதாகும். ஒரு கவிஞன் கவிதையை உண்டாக்குவதைப் போல் கட்டிடக் கலைஞன் கட்டிடத்தை உண்டாக்கியதுபோல் நாம் நமது உலகத்தை உண்டாக்குகிறோம்.

"உண்டாக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே உலகம் நமக்குக் கிடைக்கிறது. வேறு வடிவத்தில் உலகம் நமக்குக் கையகப்படுவதில்லை" (Muthu Mohan, 2000).

"மயில் அழகாக இருக்கிறது ஆடுகிறபோது! குயில் அழகாக இருக்கிறது பாடுகிறபோது! இவற்றைக் காட்டிலும் காக்கைகள் அழகாக இருக்கின்றன கூடியிருந்து உண்ணுகிறபோது!" என்று நீ போகும் பாதைகள் என்ற நூல் கூறுகிறது (Keelkulam Villavan, 2004).

பாரதிதாசன் 'அழகின் சிரிப்பு' என்ற கவிதையை அழகியல் நோக்கில் எழுதியுள்ளார். இதில் அழகியல் தத்துவம் வெளிப்படுகிறது.

"காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!

கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்

சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்

தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்பட்டாள்!

மாலையிலே மேற்றிசையில் இலகுகின்ற

மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ஆலஞ்

சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்

தனில் அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்" (Suratha Kalladan, 2011)

அழகு என்பாள் சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள். திருவிளக்கில் சிரிக்கின்றாள். நாரெடுத்து நறுமலரைத் தொடுப்பாளின் விரல் வளைவில் நாடகத்தைச் செய்கின்றாள். அடடே செந்தோள் புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும் புதுநடையில் பூரித்தாள். விளைந்த நன்செய்

நிலத்தினிலே என் விழியை நிறுத்தினாள். என் நெஞ்சில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள் என்று அழகின் செயல்பாட்டை எடுத்தியம்பி உள்ளார். திசை கண்டேன் வான் கண்டேன் என்ற பாரதிதாசன்,

"அசைவனவும் நிற்பனவும் கண்டேன் மற்றும்

அழகுதனைக் கண்டேன் நல்லின்பங் கண்டேன்" (Suratha Kalladan, 2011)

என்கிறார். அழகு எங்கும் உள்ளாள். அவளை நகையோடு நோக்குமாறு மனிதர்களை அழைக்கின்றார். நல்லழகு வசப்பட்டால் துன்பமில்லை என்ற உண்மையை உரக்கச் சொல்கிறார்.

நமக்குக் கிடைக்கும் ஒரு உலகம் ஒரு புனைவு. அது நம்மால் புனையப்பட்டது. "கற்பனை நிகழ்வியல் தளத்தின் காட்சிகளையும் அறிவுத் தளத்தின் கருத்தாக்கங்களையும் சந்திக்கச் செய்யும்" என்று கான்ட் கூறியுள்ளார் (Muthu Mohan, 2000). பாரதியார் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னே நாடு சுதந்திரம் பெற்று விட்டதாகக் கற்பனையில் கண்டு மகிழ்ந்தார். பெண்கள் விடுதலைக் கும்மி என்ற தலைப்பில் பெண்கள் விடுதலை பெறுவதற்கு முன்னே விடுதலை பெற்று விட்டதாகக் கற்பனையில் கண்டு களித்துப் பெண்களைக் கும்மியடிக்க அழைத்தார்.

கும்மியடி தமிழ்நாடு முழுதும் குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி என்று பாடிய பாரதியார், எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி என்று பாடுகிறார். பாரதியார் சமத்துவம் இல்லா சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டு ஆண் பெண் சமத்துவத்தைக் காண்பது அவரது அகப்பார்வையையும் கற்பனைத் திறனையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றது.

"வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்

வேண்டி வந்தோ மென்று கும்மியடி!

சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச்

படைக்கவும் செய்திடுவோம்" (Bharathiar, 2014)

என்று பெண்களைப் பாட வைத்துள்ளார். சுதந்திரப் பள்ளு என்ற தலைப்பில் ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாடிய பாரதியார்,

"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்

எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு

சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே - இதைத்

தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே" (Bharathiar, 2014)

என்கிறார். பாரதியின் கற்பனை, நிகழ்வியல் தளத்தின் காட்சிகளையும் அறிவுத் தளத்தின் கருத்தாக்கங்களையும் சந்திக்கச் செய்தது. பாரதியார் கண்ட கனவு நனவாய் மலர்ந்தது. அவரது கற்பனைகள் நாட்டு விடுதலையாக, நங்கையர் முன்னேற்றமாக மலர்ந்தன.

பாரதிதாசன் இயற்றிய புரட்சிக்கவியில் உதாரன் நிலவைப் பெண்ணாக உருவகித்துப் பாடுவதில் பாரதிதாசனின் கற்பனைத் திறம் புலப்படுகிறது.

"நீலவான் ஆடைக்குள் உடல்மறைத்து

நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக்

கோல முழுதும் காட்டி விட்டால் காதற்

கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்

சோலையிலே பூத்த தனிப் பூவோ நீதான்!

சொக்க வெள்ளிப் பாற்குடமோ, அமுத ஊற்றோ!

காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்

கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ!" (Kalpana Dhasan, 2000)

என்கிறார். நிலவு காரிருளின் சிரிப்போ என்ற பாரதிதாசன் பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான் என்கிறார்.

"சிந்தாமல் சிதறாமல் அழகையெல்லாம்

சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி

இந்தாவென்றே இயற்கை அன்னை வானில்

எழில் வாழ்வைச் சித்தரித்த வண்ணந்தானோ!" (Kalpana Dhasan, 2000)

என்னும் பாடலடிகளில் பாரதிதாசனின் கற்பனையே கற்பனை! நிலவின் அழகுக்காட்சி கண்முன் களிநடம் புரிகிறது. இயற்கை அன்னை எல்லா அழகையும் சிந்தாமல் சிதறாமல் சேகரித்துக் குளிர்ச்சியை ஏற்றி ஒளியை ஊட்டி எழில் நிறை வாழ்வாக நிலவை வானில் வைத்துள்ளாள் என்பதில் கற்பனை அழகு களிநடம் புரிகிறது.

## பயன்வழிக் கொள்கை

பயன்வழிக் கொள்கையில் பயன்கள் அல்லது விளைவுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பயன்வழிக் கொள்கையை வளர்த்த வில்லியம் ஜேம்ஸ் என்பவர் "ஒரே கல்லிலிருந்து பல ஓவியர்கள் தத்தமது நோக்கங்கள், கற்பனைகளுக்கு ஏற்ப வெவ்வேறு சிலைகளைச் செதுக்க முடிவதுபோல மனிதர்கள் தமது அனுபவம் சார்ந்து வாழ்க்கைச் சூழல்களிலிருந்து தத்தமக்கு உகந்த வாழ்க்கைப் பார்வையைக் கல்லி எடுக்கின்றனர்" என்கிறார் (Muthu Mohan, 2000). சூழல்களை விட சூழல்களை எவ்வாறு எதிர்கொள்கிறோம் என்பதைப் பொருத்து விளைவுகள் இருக்கும்.

புரட்சிக் கவியில் உதாரன் நிலவைத் தன் இரு விழிகளால் காணுகின்ற போது தனக்கு ஏற்படும் அனுபவங்களை எடுத்துரைக்கின்றான். விளைவுகள் நன்மைகளாக இருக்கின்றன.

"உன்னை எனது இரு விழியாற் காணுகின்றேன்

ஒளி பெறுகின்றேன், இருளை ஒதுக்குகின்றேன்

இன்னலெலாம் தவிர்கின்றேன் களிகொள்கின்றேன்

எரிவில்லை குளிர்கின்றேன் புறமும் உள்ளும்

அன்புள்ளம் பூணுகின்றேன் அதுவும் முற்றி

ஆகாயம் அளாவுமொரு காதல் கொண்டேன்

இன்பமெனும் பால்நுரையே! குளிர் விளக்கே!

எனை இழந்தேன் உன்னெழிலில் கலந்ததாலே!" (Kalpana Dhasan, 2000)

என்னும் பாடல் நிலவைக் காண்பதினால் ஏற்படும் பயன்களை எடுத்துரைக்கிறது. நிலவு இன்பத்தை அளிக்கிறது. நிலவு தரும் இன்பம் எப்படிப்பட்டது என்பதைப் பாரதிதாசன் எடுத்துரைக்கின்றார். நித்திய தரித்திரராய் உழைத்து உழைத்துத் தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள் சிறிது கூழ் தேடும்போது பானை நிறைய வெண்சோறு இருப்பதைக் காணும் இன்பம் கவின்நிலவே உனைக் காணும் இன்பம் தானே! என்கிறார். கடுமையாக உழைத்தும் பயனின்றிப் பசியால் வாடுவோருக்குப் பானை நிறைய வெண்சோறு கிடைத்தால் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்களோ அவ்வளவு மகிழ்ச்சியை நிலவு அளிப்பதாகப் பாரதிதாசன் கூறுகிறார்.

பாரதியார் வசனக் கவிதையில் வைகறையின் செம்மை இனிது என்று கூறியவர் வைகறையைப் பெண்ணாக உருவகித்து அவள் எவற்றை எல்லாம் தருகின்றாள் என்பதைக் குறிப்பிடுகிறார்.

"அவள் திரு. அவள் விழிப்புத் தருகின்றாள். தெளிவு தருகின்றாள், உயிர் தருகின்றாள், ஊக்கந் தருகின்றாள், அழகு தருகின்றாள், கவிதை தருகின்றாள், அவள் வாழ்க" என்கிறார். வைகறைப் பொழுதினால் ஏற்படும் விளைவுகளைத் தெளிவாக எடுத்தியம்புகிறார்.

அனுபவம் அடிப்படையானது முதன்மையானது என்னும் கருத்தாக்கம் ஜான்டூவி அனுபவம் என்னும் கருத்தாக்கத்தைக் குறிப்பிட்டுள்ளார். "அனுபவம் அறிவை விட அதிக அடிப்படையான இடத்தை வகிக்கிறது." அனுபவம் அடிப்படையானது. முதன்மையானது.

பாரதிதாசன் தமிழை உயிருக்கு நேராகக் கருதினார். தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் என்று கூறிய பாரதிதாசன், "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" (கல்பனா தாசன்,2000) என்கிறார். தமிழை தனது வாழ்வாகவும் வளமாகவும் உணர்ந்தார். தமிழின் இனிமையைக் கூறுகின்றபோது தமிழை உயிர் என்கிறார். தமிழும் தானும் உண்மையிலே உடல் உயிர் என்கிறார். "உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே!" (Kalpana Dhasan, 2000) என்று தனது அனுபவத்தைக் குறிப்பிடுகின்றார்.

மிக மிக நெருங்கிய உறவுகளை எல்லாம் அயலவராகும் வண்ணம் மிகவும் நெருங்கிய உறவாக இருப்பது தமிழ். தாய், தந்தை, உடன்பிறப்புகள், உறவுகள், மனைவி, மக்கள் என எல்லா உறவுகளையும் விட நெருங்கிய உறவாக இருப்பதாகப் பாரதிதாசன் எடுத்துரைக்கிறார்.

பாரதியார் தனது அனுபவத்தைச் 'செந்தமிழ் நாடு' என்ற கவிதையில் கூறுகிறார் செந்தமிழ் நாடு என்று சொல்லும்போதே காதில் தேன் பாய்வதாகக் குறிப்பிடுகிறார். தந்தையர் நாடு என்னும் பேச்சினில் சக்தி பிறப்பதாகக் கூறுகிறார். இதனை,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" (Bharathiar, 2014)

என்ற பாடல்வழி உணரலாம். தனது தாய் தந்தையும் தனது முன்னோர்களும் வாழ்ந்து சிறந்தது இந்நாடு என்று பாரதி தனது முன்னோர்களின் அனுபவத்தையும் எடுத்துரைத்துள்ளார். இதனை

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அவர்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே" (Bharathiar, 2014)

என்னும் பாடல் உணர்த்துகிறது.

## நம்பிக்கை என்னும் கருத்தாக்கம்

நம்பிக்கை என்னும் கருத்தாக்கத்தைப் பற்றி சார்லஸ் பீர்ஸ் குறிப்பிட்டுள்ளார். அறிவை விட நம்பிக்கை மனித நடத்தைகளில் அதிக இடம் வகிக்கிறது என்பதைப் பயன் வழிக் கொள்கையாளர்கள் அனைவரும் வலியுறுத்திக் கூறியுள்ளனர். "நம்பிக்கைக்குச் செயல்பாட்டுத் தன்மை உண்டு" (முத்துமோகன்,2000) என்று ஐரோப்பியத் தத்துவங்கள் என்னும் நூல் கூறுகிறது.

"நம்பிக்கை உடையவனைக் காட்டுக்கு அனுப்பினால் காட்டையும் நாடாக்கி ஆட்சி நடத்துவான்" (Keelkulam Villavan ,2004) என்று "நீ போகும் பாதைகள்" என்ற நூல் கூறுகிறது.

வாழ்வு சீராகவும் செம்மையாகவும் இருக்க நல்லதை எண்ண வேண்டும். எண்ணியது எண்ணியாங்கு முடிதல் வேண்டும். உறுதியான நெஞ்சமும் நல்லறிவும் வேண்டும் என நம்பிய பாரதியார் இவையனைத்தும் தனக்கு வேண்டுமெனப் பராசக்தியிடம் நம்பிக்கையுடன் வேண்டுகிறார். இதனை,

"எண்ணிய முடிதல் வேண்டும்

நல்லவே எண்ணல் வேண்டும்

திண்ணிய நெஞ்சம் வேண்டும்

தெளிந்த நல்லறிவு வேண்டும்" (Bharathiar, 2014)

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

## நேர்க்காட்சித் தத்துவம்

நேர்க்காட்சித் தத்துவத்தை நேர்க்காட்சித் தன்மை (முத்துமோகன்,2000) என்று கூறலாம். எதிர்மறையாகக் கூறாமல் நேர்மறையாகக் கூறுதல். பாரதியார் "மனதில் உறுதி வேண்டும்" என்ற கவிதையில் எவையெல்லாம் வேண்டும் என உறுதிப்பட கூறியுள்ளார். மனதில் உறுதி வேண்டும், வாக்கினிலே இனிமை வேண்டும், நினைவு நல்லது வேண்டும், நெருங்கின பொருள் கைப்பட வேண்டும், கனவு மெய்ப்பட வேண்டும், கைவசமாவது விரைவில் வேண்டும், தனமும் இன்பமும் வேண்டும், தரணியிலே பெருமை வேண்டும் எனக் கூறுகிறார். வேண்டும் வேண்டும் என்று கூறுவது நேர்க்காட்சித் தத்துவமாகும்.

"கண் திறந்திட வேண்டும்

காரியத்தில் உறுதி வேண்டும்

பெண் விடுதலை வேண்டும்

பெரிய கடவுள் காக்க வேண்டும்

மண் பயனுற வேண்டும்

வானமிங்குத் தென்பட வேண்டும்

உண்மை இன்பமும் வேண்டும்

ஓம் ஓம் ஓம் ஓம்" (Bharathiar, 2014)

என்னும் பாடலடிகள் நேர்க்காட்சித் தத்துவத்தை வெளிப்படுத்துகின்றன.

## துன்பம் நீங்கட்டும் இன்பம் பெருகட்டும்

கிரேக்கத் தத்துவ அறிஞர் எபிசியூர் "இன்பமாக வாழ்தல் என்பது மனித இயல்பு. துன்பத்தை விலக்குதல் என்பது அதன் இன்னொரு பக்கம்" என்கிறார் (Muthu Mohan, 2000). துன்பத்தைக் குறைத்து இன்பத்தை அதிகமாக்கும் தத்துவம் கிரேக்கத் தத்துவமாகும்.

உலக ஒற்றுமை என்ற கவிதையில் பாரதிதாசன், "தொல்லுலக மக்கள் எல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்" (கல்பனா தாசன்,2000) என்கிறார். தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம் உலக மக்கள் அனைவரையும் ஒன்றென உணரும். இவ்வாறு உணர்வதால் சண்டையில்லை, தன்னலமும் இருக்காது.

துன்பம் பிறருக்கு. நல்லின்பம் தமக்கென்னும் மனோபாவம் அன்பினை அழிக்கும், அறத்தைக் குலைக்கும், புவி ஆக்கந்தனைக் கெடுக்கும். வன்புக்கெல்லாம் அதுவே துணையாய் விடும். வறுமையெல்லாம் சேர்க்கும் என்கிறார்.

"இன்பம் எல்லார்க்கும் என்றே சொல்லிப் பேரிகை

எங்கும் முழக்கிடுவாய்!" (Kalpana Dhasan, 2000)

என்று 'பேரிகை' என்ற கவிதையில் குறிப்பிட்டுள்ளார். "சேமம் எல்லார்க்கும் என்றே சொல்லிப் பேரிகை செகம் முழக்கிடுவாய்!" என்றும், "செல்வங்கள் யார்க்கும் என்றே சொல்லிப் பேரிகை திக்கில் முழக்கிடுவாய்" என்றும் கூறியுள்ளார். முரசு என்ற கவிதையில் பாரதியார் அன்பென்று கொட்டு முரசே என்று கூறும்போது "துன்பங்கள் யாவும் போகும்", "இன்பங்கள் யாவும் பெருகும்" என்று எடுத்துரைத்துள்ளார் (Bharathiar, 2014).

## சிந்திக்கிறேன் எனவே இருக்கிறேன்

பிரெஞ்சு அறிஞர் திகார்த் பகுத்தறிவுவாதி. ஐரோப்பிய தத்துவத்தின் முதல் ஆசிரியர். ஐரோப்பாவின் அறிவு வாத சிந்தனையின் தந்தை. "நான் சிந்திக்கிறேன் எனவே நான் இருக்கிறேன்" என்கிறார் (Muthu Mohan, 2000).

"ஒவ்வொருவரின் முன்னேற்றமும் அவரவர் செய்கின்ற சிந்தனையைப் பொறுத்தும் சிந்தனைக்குத் தகச் செயலாற்றுவதைப் பொறுத்தும் தான் அமைகின்றது. சிந்தனை இல்லாதார் வாழ்வு நிந்தனைக்கு உரிய வாழ்வாக அமைந்து விடும்" (Aravanan, 2012) என்று உரக்கச் சிந்தியுங்கள் என்று தலைப்பில் 'நீயே வெல்வாய்' என்ற நூல் எடுத்துரைக்கிறது. "எண்ணித் துணிக கருமம்" என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

பாரதியாரின் சிந்தனைகள் மிகவும் சிறந்தவை, உயர்ந்தவை. சிந்திக்கிறேன் எனவே இருக்கிறேன் என்பதையும் கடந்து 'சிந்திக்கிறேன் எனவே வாழ்கிறேன், வாழவைக்கிறேன்' என்ற உயர் தத்துவத்தை எட்டிப்பிடித்தவர் பாரதியார். மனிதர்கள் உயர்ந்த நெறிமுறைகளைக் கடைப்பிடித்து வாழ்வைச் செம்மையாக வாழ பாரதியின் உயர் சிந்தனைகள் உதவுகின்றன. பாரததாய் "செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்" என்று பெருமிதம் கொள்கிறார் பாரதி (Bharathiar, 2014).

பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு என்றுரைத்த பாரதியார் பாரத நாடு எவற்றிலெல்லாம் சிறந்து விளங்குகிறது என்பதில் அவரது சிந்தனையின் செழுமை வெளிப்படுகிறது. தீரத்திலே, படை வீரத்திலே, நெஞ்சில் ஈரத்திலே, ஆக்கத்திலே தொழில் ஊக்கத்திலே உயர் நோக்கத்திலே உயர்ந்த நாடு நம் பாரத நாடு என்கிறார்.

ஆற்றினிலே சுனை ஊற்றினிலே தென்றல் காற்றினிலே மலைப்பேற்றினிலே தோட்டத்திலே மரக்கூட்டத்திலே கனி ஈட்டத்திலே பயிர் ஊட்டத்திலே உயர்ந்த நாடு நம்பாரத நாடு என்கிறார்.

"ஞானத்திலே பரமோனத்திலே - உயர்

மானத்திலே அன்ன தானத்திலே

கானத்திலே அமுதாக நிறைந்த

கவிதையிலே உயர் நாடு" (Bharathiar, 2014)

என்கிறார். சிந்திக்கிறேன் எனவே இருக்கிறேன் என்னும் திகார்க் தத்துவத்தோடு இது பொருந்தி வருகிறது. நமக்குக் கிடைக்கும் உலகம் ஒரு புனைவு. அது நம்மால் புனையப்பட்டது என்ற கான்ட் தத்துவத்தோடும் பொருந்தி வருகிறது (Muthu Mohan, 2000). உயர்ந்த உள்ளம் படைத்த பாரதி உயர்ந்த சிந்தனையை வெளிப்படுத்துகிறார். நாம் எப்படிப் பார்க்கிறோமோ அப்படியோ இந்த உலகம் நமக்கு இருக்கும்.

## மனித சாராம்சம் உழைப்பு

"உழைக்க உழைக்கத்தான் உயிர் வாழ்க்கை எனக்கு இனிக்கிறது" என்கிறார் பெர்னாட்ஷா. "என் வெற்றிக்கு முதல் காரணம் உழைப்பு. இரண்டாவது காரணம் உழைப்பு. மூன்றாவது காரணம் உழைப்பு" என்கிறார் மார்க்சிம் கார்க்கி என்று "நீ போகும் பாதைகள்" என்ற நூல் கூறுகிறது.

"மனித சாராம்சம் உழைப்பு. உழைக்கத் தெரிந்தவன் மனிதன்" என்று மார்க்ஸ் கூறியுள்ளார். உழைப்பால் உற்பத்தி பெருகும். உழைப்பு சமூகத் தொடர்புகளை ஏற்படுத்துவதில் முதன்மை இடம் பெறுகிறது (Muthu Mohan, 2000).

"நிலையாக வெற்றி பெற்றவனுடைய படிக்கட்டு ஒவ்வொன்றும் அவனது வேர்வை நீராலும் இரவு பகல் உழைப்பாலும் நின்று நிதானித்துக் கட்டப்பட்டதை என்பதை அவன் மட்டுமே அறிவான்" (Aravanan, 2012) என்று உழைப்பை நம்புங்கள் என்ற தலைப்பில் நீயே வெல்வாய் என்ற நூல் எடுத்துரைக்கிறது.

"தாங்கள் உண்ணும் உணவுக்காக உழைக்க வேண்டும்" (சூசைமாணிக்கம்,2019) என்கிறார் தூய பவுல்.

பாரதிதாசன் நாள்தோறும் பாடுபட்டு உழைக்கும் மக்களின் கடினமான உழைப்பையும் அவர்களின் நிலையையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

"மலையைப் பிளந்தோம் - புவி

வாழவென்றே கடல் ஆழமும் தூர்த்தோம்

அலைகடல் மீதில் - பல்

லாயிரங் கப்பல்கள் போய்வரச் செய்தோம்

பல தொல்லையுற்றோம் - யாம்

பாதாளம் சென்று பசும்பொன் எடுத்தோம்

உலையில் இரும்பை - யாம்

உருக்கிப் பல்யந்திரம் பெருக்கியுந் தந்தோம்" (Kalpana Dhasan, 2000)

என்று தொழிலாளர் கூற்றாக பாரதிதாசன் கூறியுள்ளார். தொழிலாளர்கள் உடுக்க உடையின்றி கந்தை ஆடையை உடுத்தியுள்ளனர். மொந்தையிற் கூழைப் பலர் மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடக்கின்றனர் என்கிறார். உழைப்பாளர்களின் உழைப்பினால் உற்பத்தி பெருகினாலும் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காததால் அவர்களின் பொருளாதார நிலை மிகவும் மோசமாகவே உள்ளது.

விண்ணிலிருந்து உலகத்தைக் வானவர் காப்பதைப் போல் அந்த உலகத்தைக் காப்பவர்கள் தொழிலாளர்களே என்பதைப் பாரதியார் உறுதியாகக் கூறுகிறார்.

"மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!

மரத்தை வெட்டி மனைசெய்வீரே!

உண்ணக் காய்கனி தந்திடுவீரே!

உழுது நன்செய்ப் பயிரிடுவீரே!

எண்ணெய் பால்நெய் கொணர்ந்திடுவீரே!

இழையை நூற்று நல்லாடை செய்வீரே!

விண்ணில் நின்று எமை வானவர் காப்பார்!

மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!"

எனத் தொழிலாளர்களின் மேன்மையைக் கூறுகிறார் (Bharathiar, 2014).

## எதார்த்தம் அறிவுபூர்வமானது

“எதார்த்தம் அறிவுபூர்வமானது. அறிவு எதார்த்தப் பூர்வமானது” (முத்து மோகன்,2000) என்ற தத்துவத்தை ஹெகல் என்பவர் எடுத்துரைத்துள்ளார்.

‘உலகம் உன்னுடையது’ என்ற கவிதையில் பாரதிதாசன் பல ஆழமான உண்மைகளை எடுத்தியம்புகிறார். அறிவை விரிவு செய்ய அறிவுறுத்துகிறார். மக்கள் பெருங்கடல். இதில் சங்கமம் ஆகி, மானிட சமுத்திரம் நானென்று கூறு என்கிறார். இதனை,

“எங்கும் பாரடா இப்புவி மக்களைப்

பாரடா உனது மானிடப் பரப்பை

பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!

என்குலம் என்றுனைத் தன்னிடம் ஒட்டிய

மக்கள் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சி கொள்!

அறிவை விரிவு செய் அகண்டமாக்கு!

விலாசப் பார்வையால் விழுங்கு மக்களை!

அணைத்துக்கொள்! உன்னைச் சங்கமமாக்கு

மானுட சமுத்திரம் நானென்று கூவு!” (Kalpana Dhasan, 2000)

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன. உலகம் உண்ண உண். உடுக்க உடுப்பாய். புவியை நடத்து பொதுவில் நடத்து என்கிறார். இந்த உயர்நிலையை அடைய அறிவை விரிவுசெய் அகண்டமாக்கு என்ற உண்மையை, எதார்த்த நிலையை பாரதிதாசன் எடுத்துரைக்கிறார். “அறிவை வளர்த்திட வேண்டும் மக்கள் அத்தனைப் பேருக்கும் ஒன்றாய்” என்கிறார் பாரதி (Bharathiar, 2014).

## மனிதனின் உயிர்த்தேவை அமைதி

“அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்” என்று இயேசு கூறுவதாக மத்தேயு நற்செய்தி எடுத்துரைக்கிறது (Soosai Manikkam, 2019). “அமைதிக்கு வழிவகுப்பவற்றை நாடுவோமாக” என்று தூயபவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் கூறுகிறார். அமைதியை அருளும் ஆண்டவர் அமைதியான நீர்நிலைக்கு அழைத்துச் செல்வார் என்று திருவிவிலியம் கூறுகிறது.

மனிதனின் உயிர்த்தேவை அமைதி என்கிறார் சி. எஸ். பீர்ஸ் ‘புதிய உலகு செய்வோம்’ என்னும் கவிதையில் பாரதிதாசன் அமைதிக்கான வழியை எடுத்துரைக்கிறார் (Muthu Mohan, 2000). இதனை,

“புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட

போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்” (Kalpana Dhasan, 2000)

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இதயமெல்லாம் அன்பு நதியினில் நனைப்போம். இது ‘எனது’ என்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம் என்கிறார். உலகில் போர்கள் இல்லையெனில் உள்ளத்தில் அமைதி குடிகொள்ளும். உலகத்தை அமைதி ஆட்சி செய்யும் என்று பாரதிதாசன் கூறுகிறார்.

அறிவியல் அறிஞர் லூயி பாஸ்டர், “அமைதி எங்கே இருக்கிறது? நூலகங்களிலும் சோதனைக் கூடங்களிலுந்தான் அமைதி தவழ்கிறது” என்கிறார் (Aravanan, 2012) என்று நீயே வெல்வாய் என்ற நூல் கூறுகிறது. ‘புரட்சிக்கப்பால் அமைதி’ என்கிறார் பாரதிதாசன். “ஓரக் கரையினில் அலைகள் மோதிக்

கலகங்கள் விளைவிக்கும். ஆனால் அருகுள்ள அலைகளுக்கு அப்பால் கடலிடை அமைதி அன்றோ?" என்கிறார் பாரதிதாசன் (Kalpana Dhasan, 2000).

## விடுதலை

"விடுதலை என்னும் உடைகளை அவர் எனக்கு உடுத்தினார்" (மரியானுஸ் ஆரோக்கிய சாமி, 1995) என்கிறார் எசாயா. சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்ற தன்னை இறைவன் அழைத்ததாக இறைவாக்கினர் எசாயா குறிப்பிட்டுள்ளார். விடுதலையைத் தனக்கு ஆடையாக இறைவன் அணிவித்தார் எனவும் கூறியுள்ளார்.

பெண் விடுதலைக் கும்மி, பெண் விடுதலை என்ற கவிதைகளில் பாரதியார் பெண்களின் விடுதலையைப் பற்றி எடுத்தியம்பியுள்ளார். விடுதலை என்ற கவிதையில் விடுதலை! விடுதலை! விடுதலை! என முழங்கும் பாரதி, யார் யாருக்கெல்லாம் விடுதலை எனப் பட்டியல் இடுகிறார். "ஏழையென்றும் அடிமையென்றும் எவனும் இல்லை ஜாதியில்" என்று கூறியவர், "மனிதர் யாரும் ஒருநிகர் சமானமாக வாழ்வமே!" என்று வாழும் வழியைக் காட்டுகிறார்.

"அன்பென்று கொட்டு முரசே - அதில்

யார்க்கும் விடுதலை உண்டு" (Bharathiar, 2014)

என்று விடுதலையைப் பற்றி பாரதியார் கூறியுள்ளார்.

## முடிவுரை

அற்புதமான பிரெஞ்சுப் பொருள் முதல்வாதியாகிய தித்ரோ இறைவன் உலகைப் படைத்தார். "படைக்கப்பட்ட உலகம் அதன்பின் சுதந்திரமாகத் தனது சொந்த இயக்க விதிகளால் செயல்படுகிறது. கடவுள் அதனுள் தலையிடுவது கிடையாது" என்று குறிப்பிட்டுள்ளார். பரம்பொருளாகிய இறைவன் தான் படைத்ததைப் பராமரித்துக் காத்து வருகிறார் என்று பாரதி குறிப்பிட்டுள்ளார். "இயற்கையை இறைவன் எனலாம். இறைவனை இயற்கை எனலாம்" என்று பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஸ்பினோசா கூறியுள்ளார். இக்கூற்று பாரதியாரின் கூற்றோடு பொருந்தி வருகிறது. பிரெஞ்சுப் பொருள் முதல்வாதி ஹோல்பாக், "எல்லாவற்றுக்கும் காரணமாக அமைவது இயற்கை. அது தன்னில் தானே வாழுகிறது. இயற்கை நிரந்தரமானது. எல்லாக் காலத்திலும் அது வாழும்" என்கிறார். பரம்பொருளின் பல்வேறு தோற்றமாக இயற்கையைக் கண்டார் பாரதி, இயற்கை அனைத்தும் ஒருபொருளே. எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்றார் என்று பாரதி குறிப்பிட்டுள்ளார். "இயற்கையில் எல்லாமே இயக்கத்தில் உள்ளன. பொருள் தனக்குள்ளேயே தனக்கு இயக்கு சக்தியைக் கொண்டுள்ளது. பொருளின் சாராம்சமே இயக்கம்தான். ஒரு பருப்பொருளுக்கும் இன்னொன்றுக்கும் இடையிலான உறவே இயக்கம்" என்று ஹோல்பாக் வரையறுத்துள்ளார். பாரதியார் ஞாயிறு பலவற்றோடு தொடர்புடையது. ஞாயிறின் முகத்தைப் பார்க்கும் பொருளெல்லாம் ஒளி பெறுகின்றன. ஒளியைப் பெற்றதும் நகை செய்கின்றன. ஞாயிறு பலவற்றோடு உறவும் தொடர்பும் கொண்டுள்ளது என்பதைப் பாரதி சுட்டிக்காட்டுகிறார். ஜெர்மானிய நாட்டு தத்துவ அறிஞர் கான்ட் என்பவரின் தத்துவங்களில் ஒன்று புலன்சாரா நிகழ்வியல் அல்லது அழகியல் என்பதாகும். "உண்டாக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே உலகம் நமக்குக் கிடைக்கிறது. வேறு வடிவத்தில் உலகம் நமக்குக் கையகப்படுவதில்லை" எனக் குறிப்பிட்டு உள்ளார். பாரதிதாசன் 'அழகின் சிரிப்பு' என்ற கவிதையை அழகியல் நோக்கில் எழுதியுள்ளார். நமக்குக் கிடைக்கும் ஒரு உலகம் ஒரு புனைவு. அது நம்மால் புனையப்பட்டது. "கற்பனை நிகழ்வியல் தளத்தின் காட்சிகளையும் அறிவுத் தளத்தின் கருத்தாக்கங்களையும் சந்திக்கச் செய்யும்" என்று கான்ட் கூறியுள்ளார். பாரதியார் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னே நாடு சுதந்திரம் பெற்று விட்டதாகக் கற்பனையில் கண்டு மகிழ்ந்தார். ஜான்டுவி "அனுபவம் அறிவை விட அதிக அடிப்படையான இடத்தை வகிக்கிறது." அனுபவம் அடிப்படையானது. முதன்மையானது என்கிறார். பாரதிதாசன் தமிழை உயிருக்கு நேராகவும் நெருங்கிய உறவாகவும் உணர்ந்தார். சார்லஸ் பீர்ஸ் "அறிவை விட நம்பிக்கை மனித நடத்தைகளில்

அதிக இடம் வகிக்கிறது" என்றார். பாரதியார் பராசக்தியிடம் நம்பிக்கையுடன் வேண்டுகிறார். நேர்க்காட்சித் தத்துவத்தை நேர்க்காட்சித் தன்மை என்று கூறலாம். எதிர்மறையாகக் கூறாமல் நேர்மறையாகக் கூறுதல். பாரதியார் "மனதில் உறுதி வேண்டும்" என்ற கவிதையில் எவையெல்லாம் வேண்டும் என உறுதிப்பட கூறியுள்ளார். துன்பத்தைக் குறைத்து இன்பத்தை அதிகமாக்கும் தத்துவம் கிரேக்கத் தத்துவமாகும். 'முரசு' என்ற கவிதையில் பாரதியார் அன்பென்று கொட்டு முரசே என்று கூறும்போது "துன்பங்கள் யாவும் போகும்", "இன்பங்கள் யாவும் பெருகும்" என்று எடுத்துரைத்துள்ளார். பிரெஞ்சு அறிஞர் திகார்த் ஐரோப்பிய தத்துவத்தின் முதல் ஆசிரியர். ஐரோப்பாவின் அறிவு வாத சிந்தனையின் தந்தை. "நான் சிந்திக்கிறேன் எனவே நான் இருக்கிறேன்" என்கிறார். பாரதியாrhர், பாரதிதாசன் இவர்களின் சிந்தனைகள் மிகவும் சிறந்தவை, உயர்ந்தவை. "மனித சாராம்சம் உழைப்பு. உழைக்கத் தெரிந்தவன் மனிதன்" என்று மார்க்ஸ் கூறியுள்ளார். உழைப்பால் உற்பத்தி பெருகும். பாரதிதாசன் நாள்தோறும் பாடுபட்டு உழைக்கும் மக்களின் கடினமான உழைப்பையும் அவர்களின் நிலையையும் எடுத்துக் காட்டியுள்ளார். எதார்த்தம் அறிவுபூர்வமானது. அறிவு எதார்த்தப் பூர்வமானது என்ற தத்துவத்தை ஹெகல் என்பவர் எடுத்துரைத்துள்ளார். 'உலகம் உன்னுடையது' என்ற கவிதையில் பாரதிதாசன் பல ஆழமான உண்மைகளை எடுத்தியம்புகிறார். அறிவை விரிவு செய்ய அறிவுறுத்துகிறார். மக்கள் பெருங்கடல். இதில் சங்கமம் ஆகி, மானிட சமுத்திரம் நானென்று கூறு என்கிறார். மனிதனின் உயிர்த்தேவை அமைதி என்கிறார் சி. எஸ். பீர்ஸ். 'புதிய உலகு செய்வோம்' என்னும் கவிதையில் பாரதிதாசன் அமைதிக்கான வழியை எடுத்துரைக்கிறார். விடுதலை தத்துவம். பெண் விடுதலைக் கும்மி, பெண் விடுதலை என்ற கவிதைகளில் பாரதியார் பெண்களின் விடுதலையைப் பற்றி எடுத்தியம்பியுள்ளார். ஐரோப்பிய தத்துவங்களையும் பாரதியார் பாரதிதாசன் கவிதைகளையும் ஒப்பிட்டு நோக்கும் போது ஒற்றுமைக் கூறுகள் மிகுந்து காணப்படுகின்றன. பெரும்பாலான ஐரோப்பிய தத்துவங்கள் பாரதியார், பாரதிதாசன் கவிதைகளில் இடம்பெற்றுள்ளன.

## References


Aravanan, (2012) Nee Velvai, Tamil Kottam, Chennai, India.

Bharathiar, (2014) Mahakavi Bharathiar Kavithaikal, New Century Book House, Chennai, India

Kalpana Dhasan, (2000) Bharathidhasan Padalkal, Pavai Publication, Chennai, India

Keelkulam Villavan, (2004) Nee Pogum Pathikal, Kannama Pathippagam, Keelkulam, India

Muthu Mohan, N. (2000) Iropiya thathuvankal, Kavya Pathippagam, Bangalore, India

Soosai Manikkam, (2019) Puthiya Earpadu, TNBCLC, Tindivanam, India.

Suratha Kalladan, (2011) Bharathidhasan Kavithaikal, Manivasagar Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License